بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ   نَحۡمَدُهٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِهِ الۡكَرِيۡمِ   وَعَلٰی عَبۡدِهِ الۡمَسِيۡحِ الۡمَوۡعُوۡدِ

# பத்ர் போரில் பங்குபெற்ற ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க சஹாபாக்களின் சம்பவங்களிலிருந்து ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய நற்குறிப்புகள்

**சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 25 ஜனவரி 2019 அன்று ஆற்றிய ஜும்ஆ பேருரையின் சுருக்கம்**

தஷஹ்ஹுத், தஅவ்வுத் மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

இன்று நான் கூறப்போகின்ற பத்ர் போர் சஹாபாக்களில் முதலாவது சஹாபியின் பெயர் ஹஸ்ரத் துஃபைல் பின் ஹாரிஸ் ஆகும். ஹஸ்ரத் துஃபைல் பின் ஹாரிஸ் தமது சகோதரரான ஹஸ்ரத் உபைதா மற்றும் ஹுஸைன் அவர்களுடன் பத்ர் யுத்தத்தில் பங்கு பெற்றிருந்தார்கள். அதே போன்று உஹது போர் மற்றும் அகழ் போர் உட்பட அனைத்து யுத்தங்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இணைந்து பங்கு பெறும் பாக்கியத்தை பெற்றார்கள். அன்னாரின் மரணம் ஹிஜ்ரி 32–ஆம் ஆண்டு 70 வது வயதில் நிகழ்ந்தது.

இரண்டாவது சஹாபி, ஹஸ்ரத் சுலைம் பின் அம்ர் அன்ஸாரி ஆவார்கள். அன்னார் உக்பாவில் 70 நபர்களுடன் பைஅத் செய்தார்கள். பத்ர் மற்றும் உஹது யுத்தத்தில் பங்கு பெற்றார்கள். உஹது போர் சந்தர்ப்பத்தில் ஷஹீதானார்கள்.

அடுத்து நான் கூறப்போகின்ற சஹாபியின் பெயர் ஹஸ்ரத் சலீம் பின் ஹாரிஸ் அன்ஸாரி ஆகும். அன்னார் பத்ர் யுத்தத்தில் பங்கு பெற்றார்கள். உஹது யுத்தத்தில் ஷஹாதத் அந்தஸ்தை பெற்றார்கள்.

அடுத்து சலீம் பின் மல்ஹான் அன்ஸாரி ஆவார்கள். அன்னாரின் தாயார் மலீகா பின்த் மாலிக் ஆவார். ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் அவர்களின் மாமாவும் ஆவார்கள். ஹஸ்ரத் உம்மே ஹராம் மற்றும் ஹஸ்ரத் உம்மே சலீம் ஆகியோரின் சகோதரரும் ஆவார்கள். ஹஸ்ரத் உம்மே ஹராம் ஹஸ்ரத் உபாதா பின் சாமத்தின் மனைவி ஆவார்கள். ஹஸ்ரத் உம்மே சலீம் ஹஸ்ரத் அபூ தல்ஹா அன்ஸாரியின் மனைவி ஆவார்கள். அவர்களின் மகனான ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சேவகராக இருந்தார். அன்னார் பத்ர் மற்றும் உஹது யுத்தத்தில் தமது சகோதரரான ஹஸ்ரத் ஹராம் பின் மல்ஹானுடன் பங்கு பெற்றிருந்தார்கள். அவர்கள் இருவருமே பேரே மஊனா சம்பவத்தில் ஷஹீதானார்கள்.

எதிரிகள் எண்ணிக்கையில் மிக அதிகமாக இருந்தனர். போரும் நடைபெற்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபாக்கள் ஷஹீதாக்கப்பட்டார்கள். முஸ்லீம்களில் ஹஸ்ரத் சலீம் பின் மல்ஹான் மற்றும் ஹகம் பின் கஸ்ஸான் ஆகியோர் சுற்றி வளைக்கப்பட்டபோது அவர்கள் கூறினர்: அல்லாஹ்வே எங்களுக்கு உன்னைத்தவிர வேறு யாரும் இல்லை. எங்களது சலாத்தை நீ உனது தூதருக்கு எட்ட வைத்து விடுவாயாக. ஏனென்றால் நீதான் எங்களுக்கு இஸ்லாத்தை வந்தடையச் செய்தாய். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஜிப்ரீல் (அலை) அவர்கள் தகவல் கொடுத்தார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: வ அலைஹிமுஸ் ஸலாம் அதாவது அவர்களின் மீது சாந்தி உண்டாவதாக.

முன்ஸிர் பின் அம்ர் அந்த மக்களிடத்தில் கூறினார்: நாங்கள் உமக்கு அமைதி நல்க வேண்டும் என்று நீங்கள் விரும்பினால் நாங்கள் உங்களுக்கு பாதுகாப்பு தந்து விடுவோம். ஆனால் அவர்கள் மறுத்து விட்டனர். அவர்கள் ஹஸ்ரத் ஹராமின் ஷஹாதத்திற்குரிய இடத்திற்கு வந்தார்கள். மேலும் அவர்களுக்கெதிராக போர் தொடுத்தார்கள். எந்த அளவுக்கு என்றால் சஹாபாக்கள் ஷஹீதாக்கப்பட்டார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அவர்கள் மரணிக்க வேண்டும் என்பதற்காக போரிட்டார்கள். மேலும் முன்னேறினார்கள்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: அவர்கள் மரணத்தை துணிவுடன் எதிர்கொண்டார்கள். ஆயினும் அவர்கள் அதனை நன்கு அறிந்திருந்தார்கள். மிக தைரியத்துடன் எதிரிகளை எதிர்கொண்டார்கள்.

அடுத்து குறிப்பு வருகின்றது. ஹஸ்ரத் சலீம் பின் கைஸ் அன்ஸாரி ஆவார். ஹஸ்ரத் ஹம்ஸா அவர்களின் மனைவியான ஹஸ்ரத் கவ்லி பின்த் கைஸ் அவர்களின் சகோதரர் ஆவார். அன்னார் பத்ர், உஹது மற்றும் அகழ் போர் உட்பட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இணைந்து யுத்தங்களில் பங்கு பெற்றார்கள். ஹஸ்ரத் உஸ்மான் அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் அன்னாரது மரணம் நிகழ்ந்தது.

அடுத்த சஹாபி ஹஸ்ரத் சாபித் பின் சஃலபா ஆவார். ஹஸ்ரத் சாபித் அவர்கள் 70 அன்ஸார் சஹாபாக்களுடன் இரண்டாவது பைஅத்தே உக்பாவில் கலந்து கொண்டார்கள். பத்ர், உஹது மற்றும் அகழ் போர் மற்றும் ஹுதைபிய்யா உடன்படிக்கை மற்றும் மக்கா வெற்றி, தாயிஃப் போர் போன்ற முக்கிய தருணங்களில் அன்னார் பங்கு பெற்றுள்ளார்கள். அன்னார் தாயிஃபிற்கு எதிராக போர் நடைபெற்ற நாளில் ஷஹாதத் அந்தஸ்தைப் பெற்றார்கள்.

அடுத்து இன்னொரு சஹாபி அவரது பெயர் ஹஸ்ரத் சமாக் பின் சஅது ஆகும். பத்ர் யுத்தத்தில் தனது சகோதரரான ஹஸ்ரத் பஷீர் அவர்களுடன் இணைந்து பங்கு பெற்றார்கள். உஹது போரிலும் பங்கு பெற்றிருந்தார்கள். அன்னார் ஹஸ்ரஜ் கோத்திரத்தை சார்ந்தவர்களாக இருந்தார்கள்.

அடுத்த ஒரு சஹாபி அவரது பெயர் ஜாபிர் பின் அப்துல்லாஹ் பின் ரியாப் ஆகும். ஹஸ்ரத் ஜாபிர் அவர்கள் துவக்க காலத்தில் பைஅத் செய்த ஆறு நபர்களில் ஒருவராக இருந்தார்கள். ஹஸ்ரத் ஜாபிர் பதர், உஹது மற்றும் அகழ் போர் உட்பட அனைத்துப் போர்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இணைந்து பங்கு பெற்றிருந்தார்கள். பைஅத்தே உக்பாவிற்கு முன்பாக அன்ஸார்களில் சில மக்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்களை சந்தித்தனர். அவர்களின் எண்ணிக்கை ஆறு ஆகும்.

அந்த சஹாபாக்களின் பெயர்கள் இவ்வாறாகும்: **1.**சஅது பின் ஸராரா, **2.**அவ்ஃப் பின் ஹாரிஸ், **3.**ராஃபி பின் மாலிக் பின் அஜ்லான், **4.**கத்பா பின் ஆமிர் பின் ஹதீதா, **5.**உக்பா பின் ஆமிர் பின் நாபீ, **6.**ஜாபிர் பின் அப்தில்லாஹ் பின் ரியாப் ஆகியோர் ஆவர்.

இவர்கள் அனைவரும் முஸ்லீம்கள் ஆயினர். இம்மக்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை சந்தித்து விட்டு புறப்படும்போது இவ்வாறு கூறினர்: போர்கள் எங்களை மிகவும் பலஹீனப்படுத்தி விட்டன. எங்களுக்கிடையில் ஏராளமான மன மார்ச்சரியங்கள் உள்ளன. நாங்கள் இப்போது மதீனா திரும்பிச் சென்று எங்களது சகோதரர்களுக்கு இஸ்லாத்தைப் பற்றி தப்லீக் செய்வோம். உங்களது தூதுச் செய்தியின் மூலமாக மேலும் எங்களின் தப்லீக்கின் மூலமாகவும் அல்லாஹ் எங்களை மீண்டும் ஒன்றுகூட்டி விடுவது சாத்தியமற்ற ஒன்றல்ல. மீண்டும் நாங்கள் ஒன்றுபட்டு விடுவோம் என்றால் நாங்கள் எல்லா வகையிலும் உங்களுக்கு உதவி செய்ய ஆயத்தமாக இருப்போம்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் முன்ஸர் பின் அம்ர் பின் ஹுனைஸ் ஒரு சஹாபி ஆவார். **معنق للموت** என்பது அன்னாரது பட்டப் பெயராகும். அதாவது மரணத்தை தானாக முன் சென்று அணைத்துக் கொள்பவர் என்பது அதன் பொருளாகும். அன்ஸார்களின் கோத்திரமான ஹஸ்ரஜ் கோத்திரத்தின் பனூ சாயிதாவைச் சார்ந்தவர்களாக இருந்தார்கள். பைஅத்தே உக்பாவில் பங்கு பெற்றிருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் முர்ஸிர் பின் அம்ர் அவர்களையும், ஹஸ்ரத் சஅது பின் இபாதா அவர்களையும் அவர்களின் கோத்திரமான பனூ சாயிதாவின் கண்காணிப்பாளர்களாக நியமித்தார்கள். அறிவீனமான காலகட்டத்தில் கூட ஹஸ்ரத் முன்ஸிர் அவர்கள் எழுதப்படிக்க அறிந்திருந்தார்கள். ஹஸ்ரத் முர்ஸிர் அவர்கள் பத்ர் போர் மற்றும் உஹது போரில் பங்கு பெற்றார்கள். சூஃபி இயல்புடைய மனிதராக அன்னார் இருந்தார்கள். பேரே மஊனா சம்பவத்தில் அன்னார் ஷஹீதானார்கள்.

வரலாற்றில் வருகிறது: ஜிப்ரீல் (அலை) அவர்கள் பேரே மஊனா ஷுஹதாக்கள் தொடர்பாக தகவல் கொடுத்தபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன்ஸிர் பின் அம்ர் அவர்கள் தொடர்பாக கூறினார்கள். அந்த சஹாபி **عانق للموت** ஆவார்கள். அதாவது ஹஸ்ரத் முன்ஸிர் பின் அம்ர் அவர்கள் இப்போது தமக்கு ஷஹாதத் விதிக்கப்பட்டுள்ளது என்பதை நன்கு அறிந்த பிறகும் தமது நண்பர்களைப் போன்று அதே இடத்தில் போரிட்டு ஷஹாதத்தை ஏற்றுக் கொண்டார்கள்.

ஹஸ்ரத் முன்ஸிர் பின் அம்ர் அவர்களிடத்தில் அந்த மக்கள் கூறினார்கள்: நீங்கள் விரும்பினால் நாங்கள் உங்களுக்கு பாதுகாப்பு வழங்கி விடுவோம். ஆனால் ஹஸ்ரத் முன்ஸிர் அவர்களின் அடைக்கலத்தை நிராகரித்து விட்டார்கள்.

ஹஸ்ரத் முஅபித் பின் இபாத் ஒரு சஹாபி ஆவார். அவரின் பட்டப்பெயர் அபூ ஹுமைஸ் ஆகும். அன்னாரது தந்தையின் பெயர் இபாத் பின் கஷீர் ஆகும். அவர்கள் ஹஸ்ரஜ் கோத்திரத்தின் கிளையான பனூ சாலிம் பின் கனம் பின் அவ்ஃப் கோத்திரத்தை சார்ந்தவர்களாக இருந்தனர். பத்ர் மற்றும் உஹது போர்களில் அன்னார் பங்கு பெற்றிருந்தார்கள்.

அடுத்து ஒரு சஹாபி ஹஸ்ரத் அபீ பின் அபீ ஸக்பா அன்ஸாரி ஆவார்கள். அன்னாரின் தந்தையார் பெயர் சனான் பின் சபீஹ் ஆகும். அன்னார் ஹஸ்ரத் உமர் அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் மரணமடைந்தார்கள். அன்னார் அன்ஸார் கோத்திரமான ஜஹீனாவைச் சார்ந்தவராக இருந்தார்கள். பத்ர், உஹது மற்றும் அகழ் போர் உட்பட அனைத்துப் போர்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இணைந்து பங்கு பெற்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாரை ஹஸ்ரத் பஸ் பஸ் பின் அம்ர் அவர்களுடன் தகவல் அறிந்து வருவதற்காக பத்ர் போர் சந்தர்ப்பத்தின்போது அபூ சுஃப்யானின் குழுவினரின் பக்கம் அழைத்து வைத்தார்கள்.

அடுத்து ஒரு சஹாபி ஹஸ்ரத் ரபீஃ பின் அயாஸ் ஆவார்கள். அவர்கள் ஹஸ்ரஜ் கோத்திரத்தின் கிளையான பனூ லோஸான் கோத்திரத்தைச் சார்ந்தவராக இருந்தார்கள். பத்ர் யுத்தத்தில் தமது சகோதரரான வர்கா பின் அயாஸ் மற்றும் அம்ர் பின் அயாஸ் ஆகியோருடன் இணைந்து பங்கு பெற்றார்கள். உஹது யுத்தத்திலும் அன்னார் பங்கு பெற்றிருந்தார்கள்.

அடுத்த சஹாபியின் பெயர் ஹஸ்ரத் உமைர் பின் ஆமிர் அன்ஸாரி ஆகும். அவர்களின் பட்டப்பெயர் அபூ தாவூது ஆகும். அவர்களின் தந்தையின் பெயர் ஆமிர் பின் மாலிக் ஆகும். பத்ர் மற்றும் உஹது போர்களில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இணைந்து பங்கு பெற்றிருந்தார்கள்.

அடுத்த சஹாபி ஹஸ்ரத் சஅது பின் ஹவ்லா ஆவார்கள். அன்னார் பனூ கல்ப் கோத்திரத்தைச் சார்ந்தவராக இருந்தார்கள். ஹஸ்ரத் காத்திப் பின் பல்தஆ அவர்களால் விடுதலை செய்யப்பட்ட அடிமையாக இருந்தார்கள். ஹஸ்ரத் காத்திப் பின் பல்தஆ அவர்கள் அவர்களுடன் மிகவும் கருணையுடனும் அன்புடனும் நடந்து கொண்டார்கள். பத்ர் மற்றும் உஹது போர்களில் பங்கு பெற்றார்கள். மேலும் உஹது போரில் அன்னார் ஷஹீதானார்கள். ஹஸ்ரத் உமர் அவர்கள் ஹஸ்ரத் சஅது அவர்களுடைய மகன் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் சஅது அவர்களுக்கு அன்ஸார்களுடன் உதவித் தொகையை நிர்ணயித்தார்கள்.

அடுத்த சஹாபி ஹஸ்ரத் அபூ ஸினான் பின் முஹ்ஸின் பின் ஹர்ஸான் ஆவார்கள். ஹஸ்ரத் அபூ ஸினான் பின் முஹ்ஸின் ஹஸ்ரத் உக்காஷா பின் முஹ்ஸின் அவர்களின் சகோதரர் ஆவார்கள். பத்ர், உஹது மற்றும் அகழ் போர்களில் அன்னார் பங்கு பெற்றார்கள். அன்னார் பைஅத்தே ரிஸ்வானிலும் கலந்து கொண்டார்கள். ஹஸ்ரத் அபூ ஸினான் பின் முஹ்ஸின் அவர்களின் மரணம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பனூ குரைலா எனும் யூத கோத்திரத்தை சுற்றி வளைத்திருந்தபோது நிகழ்ந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாரை பனூ குரைலாவின் கபருஸ்தானில் நல்லடக்கம் செய்தார்கள்.

அடுத்து ஒரு சஹாபி ஹஸ்ரத் கைஸ் பின் அஸ் சகன் ஆவார்கள். அவர்களின் தந்தையார் பெயர் சகன் ஆகும். அன்னார் பத்ர் மற்றும் உஹது மற்றும் அகழ் போர் உட்பட அனைத்துப் போர்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் பங்கு பெற்றிருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலகட்டத்தில் திருக்குர்ஆனை தொகுத்த சஹாபாக்களில் அன்னாரும் ஒருவர் ஆவார்கள். ஹஸ்ரத் கைஸ் அவர்களின் ஷஹாதத் ஜஸர் தின சம்பவத்தன்று நிகழ்ந்தது. ஹஸ்ரத் உமர் அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் ஈரானியர்களோடு நடந்த போரில் நதிக்கரையில் பாலம் ஒன்று கட்டப்பட்டது. அதன் அடிப்டையில் அது ஜஸர் தினம் என்று கூறப்படுகின்றது.

அடுத்த சஹாபியின் பெயர் அபுல் யஸர் கஅப் பின் அம்ர் ஆகும். அன்னாரின் தந்தையார் அம்ர் பின் இபாது ஆகும். தாயார் பெயர் நஸீபா பின்த் அஸ்ஹர் ஆகும். அவர் பனூ சல்மா கோத்திரத்தைச் சார்ந்தவராக இருந்தார். அன்னார் பைஅத்தே உக்பாவிலும் பங்கு பெற்றிருந்தார். அன்னார் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் பத்ர் உட்பட ஏனைய போர்களிலும் பங்கு பெற்றிருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு சஃபீன் போரிலும் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுடன் கலந்து கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் அப்பாஸ் அவர்களை பத்ர் யுத்தத்தில் அன்னார் கைது செய்தார்கள். இது தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நிச்சயமாக இந்த சம்பவத்தில் உங்களுக்கு கண்ணியத்திற்குரிய வானவர் ஒருவர் உதவி செய்துள்ளார் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற தமது நூலில் குறிப்பிடுகின்றார்கள்:

இபாதா பின் வலீத் அறிவிக்கின்றார்கள்: நாங்கள் ஒரு முறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபியான ஹஸ்ரத் அபுல் யஸர் அவர்களை சந்தித்தோம். அப்போது அவர்களுடன் அன்னாரின் ஓர் அடிமையும் இருந்தார். மேலும் மிகவும் தடித்த ஒரு யமன் நாட்டுப் போர்வையும் அன்னாரின் உடலில் போர்த்தப்பட்டிருந்ததை நாங்கள் கண்டோம். அதேபோன்று ஒரு தடித்த போர்வையும், யமன் நாட்டுப் போர்வையும் அன்னாரது அடிமையின் உடலில் போர்த்தப்பட்டிருந்தது. அதற்கு சிறிய தந்தையாரே! நீங்கள் உங்களிடமுள்ள போர்வையை அடிமைக்கு கொடுத்து விட்டு அடிமையிடம் இருக்கின்ற அந்த போர்வைகளை நீங்கள் ஏன் எடுத்துக் கொள்வதில்லை என்று கேட்டோம். இதன் மூலம் தனித்தனியான போர்வையாக உங்கள் இருவரிடமும் இருக்குமே என்றும் கேட்டோம்.

அதற்கு அபுல் யஸர்அவர்கள், எனது அண்ணன் மகனே! எனது இந்த கண்கள் கண்டன. மேலும் எனது காதுகள் கேட்டன. மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறிய இந்த கூற்றை எனது உள்ளம் பதிந்து வைத்திருக்கின்றது. அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நீங்கள் உங்களது அடிமைகளுக்கு நீங்கள் உண்பதையே உண்ணக் கொடுங்கள். நீங்கள் பருகுவதையே அவர்களுக்கும் பருகக் கொடுங்கள். மேலும் நீங்கள் அணிவதையே அவர்களுக்கும் அணியக் கொடுங்கள் என்று கூறினார்கள். எனவே நான் உலக செல்வங்களில் எனது அடிமைகளுக்கு சமமான பங்கை கொடுப்பதையே நான் விரும்புகின்றேன். ஏனென்றால் கியாமத் நாளன்று எனது கணக்கில் நற்கூலிகளில் எந்த குறைவும் ஏற்பட்டு விடக்கூடாது என்று நான் அஞ்சுகின்றேன்.

ஹஸ்ரத் அபுல் யஸர் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: பனூ ஹராமைச் சார்ந்த ஒருவர் எனக்கு கடன் கொடுக்க வேண்டியதிருந்தது. ஒருநாள் நான் அவருடைய வீட்டிற்கு சென்றிருந்தேன். அவர் எனது குரல் கேட்டதும் வீட்டில் ஒளிந்து கொண்டார். நீங்கள் வெளியே வாருங்கள் என்று நான் அவரிடம் கூறினேன். அவர் வெளியே வந்தார். மேலும் அவர் என்னிடம், அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் உங்களிடம் பொய் பேசவோ அல்லது ஏதாவது பொய்யான வாக்குறுதியை வழங்கவோ அஞ்சினேன் என்று கூறினார்.

நான் அவர்களிடம், நீங்கள் அல்லாஹ்வின் மீது ஆணையிட்டு உண்மையாகவே இதைக் கூறுகின்றீர்களா? என்று கேட்டேன். அதற்கு அவர் ஆம்! எனவே நான் எனது கரத்தால் கடன் திருப்பிக் கொடுக்க வேண்டிய அந்த வாசகங்களை அழித்து விட்டேன்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: அபூ யஸீர் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எவர் ஒருவர் வறியவருக்கு காலக்கெடு வழங்கினாரோ அல்லது அவரின் அனைத்து கடன் சுமையையும் மன்னித்து விட்டாரோ அவருக்கு அல்லாஹ் தனது நிழலில் இடமளிப்பான். எனவே நான் உங்களது கடனை மன்னித்து விட்டேன். ஏனென்றால் எனக்கு அல்லாஹ்வின் நிழலின் தேட்டம் உள்ளது.

இதுவே அல்லாஹ்வின் மீதுள்ள அச்சத்திற்கான மற்றும் ஓர் உதாரணமாகும்.

ஹஸ்ரத் அபுல் யஸர் கஅப் பின் அம்ர் அவர்கள் ஹதீஸ்களை அறிவிப்பதில் மிகவும் கவனமாக செயல்பட்டார்கள். ஹதீஸ்களை அறிவிக்கும்போது அவர்களின் நிலை என்னவாக இருந்தது என்றால், கண்ணிலும், காதிலும் விரல் வைத்து இந்த கண்கள் இந்த சம்பவத்தைக் கண்டன. இந்த காதுகள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதை செவியுற்றன என்று கூறுவார்கள். ஹஸ்ரத் அமிர் முஆவிய்யாவின் காலகட்டத்தில் ஹிஜ்ரி **55–**வது ஆண்டில் அன்னாரின் மரணம் நிகழ்ந்தது.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: இந்த மக்கள் கண்ணியமுடையவர்களாக திகழ்ந்தார்கள். அவர்கள் நமக்கு அல்லாஹ்வுடன் நன்றியுனர்விற்கான வழிகளையும், அல்லாஹ்வின் மீதான அச்சத்திற்கான வழிகளையும் கற்றுத் தந்துள்ளார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கூற்றுகளை உள்ளத்தில் ஆழத்தால் ஒப்புக் கொண்டவாறு முழுமையாக கட்டுப்படுதலுக்குரிய வழிமுறைகளை கற்றுக் கொடுத்தார்கள். அல்லாஹ் அவர்களின் அந்தஸ்தை உயர்த்துவானாக.

**மொழியாக்கம்: மவ்லவி அப்துர் ரஹ்மான்**